மருந்து எடுத்தவுடன், பின்வரும் அறிகுறிகள் தோன்றினால், மருந்தை நிறுத்திவிட்டு, உடனே மருத்துவரை அழையுங்கள்:

- தோல் தடிப்புகள் அல்லது படைநோய்
- உடல் அரிப்பெடுத்தல்
- சுவாசிக்க அல்லது விழுங்க சிரமப்படுதல்
- தோலும் கண்களும் மஞ்சள் நிறமாக மாறுதல்

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

இந்த மருந்தை எடுப்பதற்கு முன்னால்,

- எந்த மருந்தாவது உங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்துமா என்பதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- நீங்கள் வேறு மருந்துகள் எடுத்து வருகிறீர்களா என்பதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- கல்லீரல் அல்லது சிறுநீரக நோய்கள், உங்களைத் தற்போது, அல்லது இதற்கு முன்பு பாதித்துள்ளதா என்பதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- நீங்கள் கர்ப்பமாக இருந்தால், அல்லது கர்ப்பம் தரிக்க திட்டமிட்டால், அல்லது தாய்ப்பால் கொடுத்து வந்தால் அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படி **வைத்திருக்க** வேண்டும்?

மருந்தை காற்று புகாத டப்பாவில் வைத்திருங்கள். அதன்மீது வெப்பமோ சூரிய ஒளியோ படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Ministry of Health
National Healthcare Group
SingHealth

காலாவதியான அல்லது இனிமேல் உட்கொள்ளத் தேவைப்படாத மருந்துகளை உடனே வீசிவிடுங்கள்

# நோயாளி தகவல் கையேடு



# அமில உற்பத்தியைத் தடுக்கும் மருந்துகள்

எஸ்ஸோமிப்ரசோல் • லான்ஸோப்ரசோல் • ஓமிப்ரசோல் • பான்டோப்ரசோல் • ரபிப்ரசோல்

# Proton Pump Inhibitors

Esomeprazole • Lansoprazole • Omeprazole • Pantoprazole • Rabeprazole

T60R0

மருந்துகளை எப்போதுமே பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாதவாறு வைத்திருக்கவும்

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

இம்மருந்து இரைப்பையில் சுரக்கும் அமிலத்தின் அளவைக் குறைக்கிறது. முன்சிறுகுடல் மற்றும் இரைப்பைப் புண்களுக்குச் சிகிச்சை அளிக்கவும், நெஞ்சு எரிச்சல் என்று சொல்லப்படும் இரைப்பை உணவுக்குழாய் பின்னோட்ட நோய்க்குச் (gastroesophageal reflux disease) சிகிச்சை அளிக்கவும் இது பயன்படுத்தப்படுகிறது. இரைப்பையிலுள்ள அமிலம், உணவுக்குழாயில் மேல்நோக்கிச் சென்று, நெஞ்சில் உறுத்தலையும் எரிச்சலையும் ஏற்படுத்துவதையே நெஞ்சு எரிச்சல் என்கிறோம்.

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

நீண்ட நாட்களுக்கு வாய்வழி எடுத்துக் கொள்ளும் இம்மருந்துகளை, பொதுவாக ஒரு நாளைக்கு ஒரு முறை, உணவுக்கு முன்பாக எடுத்துக்கொள்ள வேண்டும். மருந்தை எப்படி, எத்தனை முறை உட்கொள்ள வேண்டும் என்ற விவரங்கள் மருந்து விவரக் குறிப்பில் கூறப்பட்டிருக்கும். அவற்றைக் கவனமாகப் பின்பற்றுங்கள். அதில் ஏதாவது புரியவில்லை என்றால், உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

உடல் நலமான பிறகும் மருந்தைத் தொடர்ந்து எடுத்து வாருங்கள். மருத்துவரிடம் கேட்காமல் மருந்தை ஒருபோதும் நிறுத்தாதீர்கள்.

உறையில் அடைக்கப்பட்டிருக்கும் மருந்தை (capsule) அப்படியே விழுங்க வேண்டும். அதை உடைத்தோ, மென்றோ அல்லது நசுக்கியோ உட்கொள்ளக் கூடாது.



நோயாளி தகவல் கையேடு I **அமில உற்பத்தியைத் தடுக்கும் மருந்துகள்**

## மருந்து உட்கொள்ள **நான் மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

பக்க-விளைவுகள் பொதுவாக இருக்காது என்றாலும், அவை ஏற்படக்கூடிய சாத்தியமும் உள்ளது. பக்க-விளைவுகள் முதலில் இருந்தாலும், மருந்துக்கு உடல் பழகிக் கொண்டுவரும்போது அவை பொதுவாக மறைந்துவிடும். எனினும், கீழ்க்காணும் பக்க-விளைவுகள் நீடித்தாலோ அல்லது தொந்தரவு கொடுத்தாலோ, மருத்துவரைப் பாருங்கள்.

| மருந்து | பக்க-விளைவுகள் |
|---|---|
| எஸ்ஸோமிப்ரசோல்<br>லான்ஸோப்ரசோல்<br>ஓமிப்ரசோல்<br>பான்டோப்ரசோல்<br>ரபிப்ரசோல் | தலைவலி<br>வயிற்றுப்போக்கு<br>வயிற்று வலி<br>வாந்தி<br>வயிற்றுப் பொருமல் |

இவை தவிர, இந்த மருந்து எடுக்கும்போது, வழக்கத்திற்கு மாறான வேறு பக்க-விளைவுகள் ஏற்பட்டாலும் மருத்துவரைப் பாருங்கள்.